## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

## <u>அசல் வழக்கு எண்.101/2012</u>

PW3 – திரு.தமிழ்பாண்டியன் (கிராம நிர்வாக அலுவலர்) நாள். 06.02.2026

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது முகிழ்தகம் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையை பெற்று ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளேன். நான் 11.06.2025 ல் தேதி முதல் முகிழ்தகம் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் முகிழ்தகம் குரூப் புல எண்.159/5பி ல் UDR கால புலப்பட சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன், அது Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Ex.X1 ல் கண்டுள்ள புல எண்.159/5ன் உட்பிரிவுகள் 1412வது பசலி (2001 ம் ஆண்டு) வருடத்தில் உட்பிரிவு செய்யப்பட்டதாகும்.

2. UDR காலத்திலேயே Ex.X1 ல் கண்டுள்ள புல எண்.159/5ஏ ல் கண்டுள்ள பாதை அமைப்பானது இடம் பெற்றுள்ளது. புல எண்.159/5ஏ ன் மொத்த விஸ்தீரணம் 2.5 ஏர்ஸ் ஆகும். Ex.X1 ல்புல எண்.159/5ஏ தனி உட்பிரிவாகவும் அதன் மேல் பாதை அமைப்பு தனி உட்பிரிவாகவும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தானது சர்வேஎண்.159/5பி 1சியில் இடம் பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சியர் வசம் உள்ள SLR பதிவேட்டை பார்த்தால் தான் சர்வேஎண்.159/5ல் கண்டுள்ள சொத்து UDR காலத்திற்கு முன் என்ன வகைப்பாட்டில் இருந்தது என்று தெரியவரும் என்றால் சரிதான்.

3. சர்வே எண்.163ல் கண்டுள்ள சொத்தானது பாதையை அடுத்து மேற்கே அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வேஎண்.163ல் கண்டுள்ள சொத்தில் கிறிஸ்தவ ஆலயம் தென்வடலாக சுவர் கட்டி உள்ளனர் என்றால் சரிதான்.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை